**விவசாய அமைச்சு**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்) III ஆம் வகுப்பின் பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் கோரல்.**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உதவி ஆணையாளர் III ஆம் வகுப்பின் (திணைக்களம் சார்) பதவியில் உள்ள 17 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகைமைகளுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை:**

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மற்றும் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் மூலம்

**02. தேவையான தகைமைகள்:**

I. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் விசேட தரத்தின் உத்தியோகத்தராவிருத்தல்.

II. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் I வகுப்பில் ஆகக் குறைந்தது ஐந்து வருட (05) தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தையுடைய உத்தியோகத்தராக இருத்தல்,

III. பதவி உயர்வுத் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருடத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை உடையவராயிருத்தல்,

IV. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் I வகுப்பில் வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

03. **உடல் ரீதியான தகைமைகள்**

சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் உள ரீதியான ஆரோக்கியமுடையவராயிருத்தல் வேண்டும்.

04. **ஏனைய தகைமைகள்**

நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.
பதவிக்குச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் மற்றும் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு, அத்தகைமைகளை சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

05. **சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கான நிபந்தனைகள மற்றும் சேவை நிபந்தனைகள்:**

I. இச் சேவையின் பொருட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், அரச சேவையில் நியமனங்களின் பொருட்டு கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளின் பேரில், உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்) பதவியின் பொருட்டான ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணைந்தொழுகல் வேண்டும்.

II. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் மற்றும் அனாதைகள் / தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

III. நியமனம் ஒரு வருட பதிற்கடமை காலத்திற்கு உள்ளடங்கும். உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்) பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு 03 வருடங்களினுள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சை சித்தியடையதல் வேண்டும்.

IV. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 01/2014 இற்கமையவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றுநிருபத்திற்கமைய பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருட காலத்தினுள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

V. பொது சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோஷசலிச குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசின் நிதிப் பிரமாணத்திற்கும் திணைக்கள சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உள்ளடங்கும்.

**06. சம்பள அளவுத் திட்டம்:**

25.02.2016 ஆந் திகதிய 3/2006 என்னும் பொது நிர்வாக சுற்றுநிருத்தின் உப அட்டவணை 1 இற்கமைய, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 – 10 x 1335 – 8 x 1,630 - 17x2,170 - 110,895/- (SL-1 – 2006) ஆகும். தங்களுக்கு சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கமைவாக, அதன் உப அட்டவணை 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும்.

**07. தெரிவு செய்து நியமிக்கும் முறை:**

அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானித்தின் படி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகமைகளைப் பெற்றுள்ள, ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் இரு மடங்கு உத்தியோகத்தர்களின் பொருட்டு கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையினை நடாத்தி, அதில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ள திறமையின் தொடர் முறையின் அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

**08. எழுத்து பரீட்சை**

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியின் பொருட்டு புள்ளிகள் |
|---|---|---|---|
| கமநல அபிருத்திச் சட்டம் மற்றும் இலங்கையின் கமத்தொழில் இயைபு | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| விடய ஆய்வு | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

**09. பரீட்சையின் பொருட்டான பாட விதானம்**

| வினாப் பத்திரம் | பாட விதானம் |
|---|---|
| 1. கமநல அபிருத்திச் சட்டம் மற்றும் இலங்கையின் கமத்தொழில் போக்குகள் | • 2000 ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வு<br>• இலங்கையின் கமத்தொழில் நடவடிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வு<br>• கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டான நிறுவன நடவடிக்கைகள்<br>• கமத்தொழில் விற்பனைச் சந்தை |
| 2. விடய ஆய்வு | கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளை உள்ளடக்கும் வகையில் இரண்டு விடய ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்படும்.<br>• 2000 ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்<br>• முகாமைத்துவக் கோட்பாடுகள் |

## 10. தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப்பரீட்சை:

பொது சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

சேவை அனுபவம் மற்றும் திறமையின் பொருட்டு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

## 11. நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கும் முறை:

| | |
|---|---|
| சேவை அனுபவத்தின் பொருட்டு | 60 புள்ளிகள் |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆம் வகுப்பில் ஐந்து வருடங்களுக்கு (05) கூடிய தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான<br>சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம்/ கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட வகுப்பின் ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் படி ஆகக் கூடிய உச்சப் புள்ளி 60 | |
| திறமையின் பொருட்டு | 35 புள்ளிகள் |
| மேலதிகக் கல்வித் தகைமைகள்<br>(அடிப்படைத் தகைமைக்கு மேலதிகமாக)<br>ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட<br>a. பட்டப் பின் படிப்பு - 15 புள்ளிகள்<br>b. பட்டப் பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு - 15 புள்ளிகள் | |
| பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு விடயத்திற்கான துறையின் பொருட்டு<br>a. பட்டப் படிப்பு - 10 புள்ளிகள்<br>b. டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு(01 வருட அல்லது அதற்குக் கூடிய -06 புள்ளிகள் | |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டப்படும் திறமைகள் | 05 புள்ளிகள் |

## 12. விண்ணப்பிக்கும் முறை:

I. விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய இருத்தல் வேண்டும் என்பதுடன், 8½"x12" (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி அபேட்சகரினால் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 20.09.2018 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம், "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், இலக்கம் 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 " என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உதவி ஆணையாளர்(திணைக்களம் சார்) பதவிக்கான ஆட்சேர்ப்பு**" எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

III. விண்ணப்பதாரியினால் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.்.- பணம் எந்தவொரு கமநல சேவைகள் நிலையத்திலும் செலுத்தி, கமநல சேவைகள் நிலையத்தினால் பணம் பெற்றுக் கொண்டதற்காக க.சே.நி./2(அ) பற்றுச்சீட்டு விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும். அப்பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். தொடர் பயன்பாட்டின் பொருட்டு பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திலிருத்தல் பொருத்தமானதாகும். எக்காரணம் கொண்டும் அப்பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

IV. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சையின் பொருட்டான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை தமது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பரீட்சை ஆரம்பிக்கும் திகதி பரீட்சை மண்டப அதிகாரிக்கு தமது கையொப்பத்தைச் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பம் உறுதிப்படுத்தப்படாத அனுமதி அட்டையை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

V. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை அல்லது குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ஆகியவை ஏற்றுக் கொள்ளப்படும்.

VI. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற எவ்வித முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

VII. விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டவர்களில் தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலப் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறும் என்பதுடன், எழுத்துப் பரீட்சையின் மூலம் தகமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதார்களுக்கு நேர்முகப்பரீட்சையின் பொருட்டு அழைப்புக் கடிதம் வழங்கப்படும்.

13. **தவறான தகவல்களை வழங்குதல்**

தங்களினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை அல்லது தவறானவை என ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் தெரிய வருமாயின், தங்களது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்த்துக் கொண்டதன் பின்னர் தெரியவருமாயின் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாதுள்ள ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானம் பொது சேவைகள ஆணைக்குழுவின் கட்டளைப் படியாகும். அத்துடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புவது தொடர்பான இறுதித் தீர்மானம் பொது சேவைகள் ஆணைக் குழுவிற்குரியதாகும்.

பொது சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி,

..........................................................................................

..........................................................................................

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்.

திகதி: 20.08.2018

(அலுவலக பாவனையின் பொருட்டு)

<u>மாதிரி விண்ணப்பப்படிவம்</u>

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறைவேற்றுச் செயலாளர் வகுதியின் உதவி ஆணையாளர் III ஆம் வகுப்பின் (திணைக்களம் சார்) பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் கோரல்.**

01. i. முதலெழுத்துடன் பெயர் ( முதலெழுத்தை கடைசியில் ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) (உதாரணம் KAMAL . A.B.C.D.)

.............................................................................................................................................

.............................................................................................................................................

ii முழுப் பெயர் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

.............................................................................................................................................

.............................................................................................................................................

iii. முழுப் பெயர் (சிங்களம் அல்லது தமிழில்)

.............................................................................................................................................

02. i. நிரந்த முகவரி: (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்).........................................................................

.............................................................................................................................................

ii. அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி: (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

.............................................................................................................................................

.............................................................................................................................................

iii. அலுவலக முகவரி: .........................................................................................................

.............................................................................................................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. பால்: ஆண்/ பெண் ஆண் - 0 பெண் - 1 ☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

05. பிறந்த திகதி: வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ நாட்கள் ☐☐

06. விவாகமானவர்/விவாகமாகாதவர் என்பது பற்றி:-
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 ☐ } உரிய கூட்டினுள் இலக்கத்தை இடவும்)

07. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

08. i கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் II ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி:-
........................................................................................................................................

ii. பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி:- ..............................................................................................

iii. தகுதிகூர் காலம் நீடிப்பினால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 11:10:1 இன் கீழ் சம்பள ஏற்றங்கள் பிற்போடப்பட்டிருப்பின், அவ்வாறு பிற்போடப்பட்ட காலப்பகுதி: ............

09. I. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் விசேட வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி: ...................

II. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் I ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி: ....................

III. I ஆம் வகுப்பின் வினைத்திறன் கான்தடைப்பரீட்சை சம்பள புள்ளியை அடைந்த திகதி: .......

IV. I ஆம் வகுப்பின் வினைத்திறன் கான்தடைப்பரீட்சை சித்தியெய்திய/விடுவிக்கப்பட்ட திகதி: ...

V. I ஆம் வகுப்பின் வினைத்திறன் கான்தடைப்பரீட்சை சித்தியெய்வதற்கான விடுவிப்பதற்கான காலம் நீடித்திருப்பின் சம்பள ஏற்றம் பிற்போடப்பட்ட காலப்பகுதி:
........................................................................................................................................

10. ஒழுக்காற்றுத் தண்டனைகள் பெற்றிருப்பின், அத் தண்டனை என்ன என்பது பற்றி: ...........................
........................................................................................................................................

11. சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றிருப்பின், அதற்குரிய காலப்பகுதி:- .....................................................

12. மேற்படி 08, 09, 11 இன் கீழ் தவிர, சேவைக்காலத்தினுள் உரிய சம்பள ஏற்றங்களை உழைத்திராவிடின், அக்காலப்பகுதி தொடர்பான விபரங்கள்:- ............................................................
........................................................................................................................................

13. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் I ஆம் வகுப்பில் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்யும் திகதி:- ............................................................

14. மேற்படி 08, 09, 11, 12 இற்குரிய சம்பள ஏற்றங்கள் உழைத்திராத மொத்தக் காலப்பகுதி:

வருடங்கள்: …………………. மாதங்கள்: ………………….. நாட்கள்: ……………….

15. பரீட்சைக் கட்டணம்

I. செலுத்தப்பட்ட கமநல சேவைகள் நிலையம்: .........................................................

II. செலுத்திய தொகை: ................................ III. செலுத்திய திகதி: .....................

IV. பற்றுச்சீட்டு இலக்கம் : ...........................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டின் நுனியை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும் |

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் மற்றும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் உண்மைக்குப் புறம்பானவை அல்லது பிழையானவை என என்னைத் தெரிவு செய்வதற்கு முன்னர் தெரியவருமாயின் இப்பதவியின் பொருட்டு என்னைத் தகுதியற்றதாக்குவதற்கு இயலும் எனவும், என்னை இப் பதவியில் நியமிக்கப்பட்ட பின்னர் இத்தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் பிழையானவை எனவும் தெரியவருமாயின் எச்சந்தர்ப்பத்திலும் என்னை சேவையிலிருந்து நீக்கம் செய்ய முடியும் என நான் அறிவேன்.

திகதி: …………………. ........…………………………………

**உத்தியோகத்தரின் கையொப்பம்.**

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,**

இங்கு 01 தொடக்கம் 15 ஆந் திகதி வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மேற் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு/திருமதி/செல்வி ........................................................................ அவர்களின் சுயவிபரக் கோவைக்கமைய சரியானவை எனவும் அவரது வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் இவ் உத்தியோகத்தர் இப் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பதாகவும் உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பப்படித்தை சிபாரிசு செய்து சமர்க்கின்றேன்.

..............................................

**மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்,**

**உத்தியோகபூர்வ முத்திரை.**

**திகதி: ..................................**

7/2/2/5/4/3 V (III) 20.08.2018

சகல பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு,

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்) III ஆம் வகுப்பின் பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் கோரல்.**

பொது சேவைகள் ஆணைக்குழுயின் செயலாளரின் PSC/APP/8/6/11/2017 என்னும் இலக்கமுடைய 16.08.2018 ஆந் திகதிய கடித மூலம் அனுமதி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் உதவி ஆணையாளர் (திணைக்களம் சார்) வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

02. எனவே தயாரிக்கபபட்டுள்ள விண்ணப்பங்களின் பொருட்டு அழைப்பு விடுக்கும் அறிவித்தல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுவதுடன், தங்கள் மாவட்டத்தினுள் இதன் பொருட்டு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களை இது தொடர்பாக அறிவூட்டி, அவ் விண்ணப்பப்படிவங்களை தங்களது சிபாரிசுடன் விண்ணப்பங்களின் பொருட்டு அழைப்பு விடுத்துள்ள அறிவித்தலின் உள்ள முகவரிக்கு 20.09.2018 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி மேலும் அறியத் தருகின்றேன்.

**ஒப்பம்:** டபிளீயூ.எம்.எம்.பீ. வீரசேகர,
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**பிரதிகள்:**

01. பிரதான காரியாலயத்தின் சகல பிரவுகளினதும் தலைவர்கள் - த.அ.பொ.